செ.வெ. எண்: 222 நாள்: 24.03.2012

# செய்தி வெளியீடு

பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான மேம்பாட்டிற்கு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு முக்கியமானதாகும். இந்நிறுவனங்கள் அதிக அளவு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துகின்றன. குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

தற்பொழுது நிலவி வரும் மின்பற்றாக்குறையிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படாமல் தொடர்ந்து உற்பத்தியை பெருக்குவதற்காக அந்நிறுவனங்கள் நிறுவும் மின்னாக்கிகளுக்கு அதிக அளவு மானியம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. ஏற்கெனவே 125 KVA திறன் கொண்ட மின்னாக்கிகளை உபயோகப்படுத்தும் நிறுவனங்களுக்கு, அதன் விலையில் 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் 125KVA திறன் கொண்ட மின்னாக்கிகள் குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில்களின் உற்பத்தியை தொடர்வதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால், 320 KVA திறன் வரை கொண்ட மின்னாக்கிளை நிறுவவும், மானிய உச்சவரம்பினை 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த சலுகைகள் 11.11.2008 முதல் முன் தேதியிட்டு வழங்கப்படும். மேலும் இந்த சலுகையை பெற ஏற்கெனவே விண்ணப்பிக்காத நிறுவனங்களும் பயன் பெறும் வகையில் அந்நிறுவனங்கள் புதிதாக விண்ணப்பிக்க மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

அரசு அளிக்கும் இந்த சலுகை மானியத்தினால், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உயர்தர சக்தி கொண்ட மின்னாக்கிகளை நிறுவி, தங்கு தடையின்றி தங்கள் தொழிற்சாலைகளின் உற்பத்தியினை தொடருவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:– 24.3.2012